இருந்தாலும் அங்கே இருக்கக்கூடிய அந்த வேளாண் சூழலுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். ஏற்கெனவே அதை வேளாண் பாதுகாப்பு மண்டலமாக அறிவித்து, இந்த மன்றத்தில் சட்டமும் இயற்றப்பட்டிருக்கிறது. எனவே, வேளாண்மை தொழிலோடு இயைந்து இருக்கக்கூடிய தொழில்கள், உதாரணத்திற்காக உணவு பதப்படுத்தக்கூடிய தொழில்கள் அல்லது non–leather footwear என்று சொல்லக்கூடிய காலணி தயாரிக்கக்கூடிய, தோல் பதனிடுதல் இல்லாதிருக்கக்கூடிய காலணிகளை உருவாக்கக்கூடிய தொழில்கள் போன்ற தொழில்களை நாம் அந்தப் பகுதிகளிலே உருவாக்கலாம். நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்கூட, வேளாண் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்; இந்த ஆண்டு அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கனிவோடு இந்த அரசு பரிசீலித்து அதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

அடுக்குமாடி குடியிருப்புகள்

***12049—திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆனைமலை வட்டம், கம்மாளபட்டி ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆனைமலை வட்டம், கம்மாளபட்டி ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள்

2022 ஏப்ரல் 8]

கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர், இதய தெய்வம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து காட்டிய மனிதப் புனிதவதி, இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தெய்வங்களை வணங்குகிறேன். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் அண்ணன் இ.பி.எஸ்., எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ்., எதிர்க்கட்சிக் கொறடா, முன்னாள் அமைச்சர், என் வாழ்வின் ஒளிவிளக்கு அன்புச் சகோதரர் எஸ்.பி.வி. ஆகியோரை வணங்குகிறேன்.*

வால்பாறை தொகுதி, ஆனைமலை வட்டத்திற்குட்பட்ட கம்மாளபட்டி ஊராட்சியில் உள்ள கிராமத்தைச் சுற்றிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். அனைவரும் சொந்த வீடு இல்லாதவர்கள் ஆவர். ஆகவே, கம்மாளபட்டியில் க.ச. எண் 142/1, 317/16–ல் சுமார் 4 ஏக்கர் 19 சென்ட் நிலம் இரண்டு நபர்களுக்கு விவசாயம் செய்யும் பொருட்டு condition patta*–ல் வழங்கப்பட்டது. ஆனால், அந்த இரு நபர்களும் இப்போது உயிரோடு இல்லை. அவை பல ஆண்டுகளாகத் தரிசு நிலங்களாக உள்ளன. அந்த இடத்தை அரசு ஆர்ஜிதம் செய்து, அந்த இடத்தில் வீட்டு வசதி வாரியம் சார்பாக ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே பார்க்கிறபோது, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தால் அவர்கள் அதற்குண்டான தொகையைக் கொடுத்து அந்த*

இடத்தை வாங்க வேண்டியிருக்கும். எனவே, அது பொருத்தமாக இருக்காது. இதற்கான வேறு பல திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துரு என்பது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகச் செய்வதைவிட, மற்ற துறைகளின் மூலமாகவும், மற்ற திட்டங்களின் மூலமாகவும் செய்வது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பிச்சிப்புதூர், சக்தி நகருக்கு அருகில் கால்நடைத் துறைக்குச் சொந்தமான 6.30 ஏக்கர் நிலம் உள்ளது. அது இதுவரையில் எந்தப் பயன்பாட்டிலும் இல்லை. பொது மக்கள் ஆக்கிரமிப்பு செய்து பின்னர் வருவாய்த் துறையினரால் அகற்றப்பட்ட அந்த இடத்தை அரசு ஆர்ஜிதம் செய்து வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி ஏழை மக்களுக்கு வழங்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

அதேபோல கடந்த அம்மாவின் ஆட்சியில் 2019 ஆம் ஆண்டு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அன்றைய முதலமைச்சராக இருந்தபோது அன்றைய முன்னாள் அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களின் சீரிய முயற்சியால் வால்வாறை மலைப் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பாக சுமார் 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் அவை இன்னும் மக்கள் பயன்பாட்டிற்கு வராமல் இருக்கின்றன. அதை வெளிப்படைத் தன்மையோடு தகுதியான நபர்களைத் தேர்வு செய்து ஏழை மக்களுக்கு வழங்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறைக்கு சொந்தமாக இருக்கின்ற

2022 ஏப்ரல் 8]

இடம், எப்படியிருந்தாலும் அந்தத் துறைக்கு அவசியமான ஒன்றாக இருக்கும். எனவே, அந்த அவசியத்தைப் பொறுத்து அதற்கான முடிவு எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் இன்னும் பயன்பாட்டுக்கு வராமல் இருந்தால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏன் பயன்பாட்டுக்கு வரவில்லை என்பதையும் கண்டிப்பாக நாங்கள் ஆய்வு செய்வோம். அது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டதா அல்லது வேறு துறையின் மூலமாகக் கட்டப்பட்டதா என்பதையும் பார்த்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்சி (கிழக்கு) தொகுதி முழுக்க முழுக்க நகர்ப்புரப் பகுதி. எனது தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் அரசு புறம்போக்கு இடத்திலும், இரயில்வே இடத்திலும், ஆற்றங்கரையோரத்திலும், இராணுவத்திற்குச் சொந்தமான இடத்திலும் பொது மக்கள் பல ஆண்டு காலமாக வசித்து வருகின்றனர். குறிப்பாக புதுக்கோட்டை சாலை* Jail Corner, *கொசமேட்டுத் தெரு,* Pensioner Colony, Bells Ground, *கெம்ஸ்டவுன் சந்தியாகப்பர்பாளையம், இராஜமாணிக்கம்பிள்ளை நகர், ஜீவா நகர் இப்படி பல இடங்களிலே பட்டா இல்லாமல் மக்கள் வசித்து வருவதால் மாநகராட்சி சார்பிலே அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு சிக்கல்கள் இருக்கின்றன. பலரும் வீடு கேட்டு மனுக்களைத் தந்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட பகுதிகளிலே மக்கள் பயன்பெறுகிற வகையிலே வீட்டு வசதி வாரியத்தின் சார்பிலே வீடுகளைக் கட்டித் தர ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன*

அந்தத் திட்டம் நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாகச் செய்யப்பட வேண்டியது. காரணம், எல்லாம் குடிசைகளாக இருக்கின்றன; இரயில்வே இடம், அதேபோல military–க்கு சொந்தமான இடம் என்று சொன்னார்கள். எனவே, அந்தத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுத்தால் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை தொகுதி, வடசேரிப்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்கான பணிகளைத் துவக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே அந்த இடம் பள்ளிக்கூடத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம் என்கிற அடிப்படையில் அந்த ஊராட்சியில் இருக்கின்ற பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அதே ஊராட்சியில் தனியாக 10 ஏக்கர் நிலம் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்குத் தருகிறோம் என்று கூறுகிறார்கள். இந்த இடம் கிராமப்புர ஊராட்சிக்குள் வருகிறது. நகர்ப்புர மக்களுக்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடமாக இருந்தாலும் அந்த ஊராட்சியின் சார்பாக தரக்கூடிய இடத்தில் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் எப்படி இருந்தாலும், அவை கிராமத்திலிருந்து வந்தாலும் சரி, ஊராட்சியிலிருந்து வந்தாலும் சரி, அதைப் பெற்றுக்கொள்ளலாம். அதிலே எந்தத் தடையும் இல்லை. இருந்தாலுங்கூட, அந்த இடம் மிகவும் அவசியமானதாக உள்ளதா என பார்க்க வேண்டும்; துவக்கப்பட்ட வேலைகள் எவ்வளவு தூரம் நடைபெற்றிருக்கின்றன, எந்த வகையில் இருக்கிறது, எதாவது மாற்றம் செய்ய முடியுமா என்பது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம், மாண்புமிகு

2022 ஏப்ரல் 8]

மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

80—

கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம்

***11995—திரு. பெ. ராமலிங்கம்:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் தொகுதி, அய்யம்பாளையம் 8-வது வார்டு பகுதியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதி, அய்யம்பாளையத்தில் கால்நடை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 1, அய்யம்பாளையத்தில் சுமார் 20 ஆண்டுகளாக கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. சாலை விரிவாக்கத்தின்போது அந்தக் கட்டடம் இடிக்கப்பட்டதால் தற்போது 3 கிலோ மீட்டர் தொலைவிலே நல்லிபாளையம் என்ற பகுதியிலே அந்த மருந்தகம் இயங்கி வருவதால், நான்கு வழிச் சாலையைக் கடந்து கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கு அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த ஆண்டே அய்யம்பாளையத்தில் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*